முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1543

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.12.2023,** புதன்கிழமை

1. ஞானவேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் பலம்கொண்ட தேசிகனே
தானதர்மத்தின் மகா வடிவாக
தரணி எங்கும் நிரம்பி தர்மசாலைகள் நிரப்பி
2. நிரப்பியே அற்புதம் நடத்துகின்ற
ஞானியே உந்தனுக்கு நிலமதனில்
சுப்ரமணியர் யானும் கனிவோடு ஞான அறிவுரை ஆசி
கண்டுரைப்பேன் சோபகிருது சிலை திங்களில்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 04 ம் நாள், 20.12.2023, புதன்கிழமை)
3. திங்கள் தனில் அரங்கனுக்கு சக்தி கூட
தொடர்ந்து ஆறுமுகன் யான்
இவை ஆசி உரைப்பேன்
இங்கனமே அரங்கனுக்கு நித்தம்நித்தம்
4. இணையில்லா ஆற்றல் கூட்டி
எல்லா பாதுகாப்பும் தந்து
ஆறுமுகன் யான் ஆற்றல்பட
இயக்கி வருகின்றேன்
5. வருகவே அரங்கன் தர்மம்
வையகத்தை ஆளுவது உறுதி
வல்லமையான அரங்கன் தொண்டர்கள்மூலமாக
உலகமெங்கும் அரங்கனின் ஞானம் பரவி
6. பரவியே ஞான ஆட்சிக்காலம் ஞானிகள் ஆட்சிக் காலம்
ஞாலமதில் கனிவதும் உறுதிஉறுதி
உறுதி தந்து அரங்கன் உண்மைபட
சக்திக்குள் யானிருந்து வருங்காலத்தை

7. வரையறை செய்து வருகின்றேன்
வல்லமைபட அன்னதனால் உலகமாற்றம் நடந்தேறி
அரங்கன் அவதார நோக்கம் பூர்த்தியாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–